S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி பிப்ரவரி 06 * 2026 * மலர் -1 * இதழ்-248* VOL-1 * ISSUE-248 விலை ரூ.3 * பக்கம் -4








# பாலக்கோட்டில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட்சாலை, சாக்கடை கால்வாய்! அமைக்க பூமி பூஜை!

## பேரூராட்சி தலைவர் தொடங்கி வைத்தார் !!

பாலக்கோடு, பிப்.6

தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு பேரூராட்சிக்குட்பட்ட 11,16,17 வது வார்டுகளில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை கால்வாய் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி அவர்கள் தலைமையில் நடந்தது. பேரூராட்சி துணைத்தலைவர்தாஹ சீனா, கவுன்சிலர்கள் பத்தேகான், அசீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை பூர்த்தி செய்யும் வகையிலும் ,11, 16, 17, வது வார்டுகளில் சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை கால்வாய் அமைக்க 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் மூலம் 35 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து திட்டபணிக்கு பேரூராட்சி தலைவர் பி.கே. முரளி அவர்கள் பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கிளை செயலாளர் சபியுல்லா, நிர்வாகிகள் இதயாத்துல்லா, மசியுல்லா, இலியாஷ், முகம்மதுஅலி, சமர், குலாப் ஜான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கூட்டுக் கொள்ளை முயற்சி வழக்கில் தொடர்புடைய இளைஞர் கைது!

பவானி,பிப்.6

பவானியில் காரில் வந்து கூட்டுக் கொள்ளையில் ஈடுபட முயன்ற வழக்கில் தலைமறைவான இளைஞரை போலீஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

பவானி புதிய பாலம் அருகே கடந்த ஆண்டு நவம்பர் 16ஆம் தேதி இரவு போலீஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது, அவ்வழியே காரில் வந்த 5 பேர் போலீஸாரை பார்த்ததும், காரை நிறுத்திவிட்டு ஓடினர். போலீஸார் விரட்டிச் சென்று அதில் 2 சிறுவர்களைப் பிடித்தனர்.

விசாரணையில், அவரகள் காரில் வந்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட முயன்றது தெரியவந்தது. இதையடுத்து, அந்த சிறுவர்களை போலீஸார் கைது செய்த நிலையில், தப்பியோடிய பவானிசாகர் அகதிகள் முகாமைச் சேர்ந்த 3 பேரை தேடி வந்தனர்.

இந்நிலையில், பி. குமாரபாளையத்தைச் சேர்ந்த கணேசன் (47) என்பவர் சேர்வராயன்பாளையம் சுற்றுவட்ட சாலையில் திங்கள்கிழமை இரவு நின்றிருந்துள்ளார்.

அப்போது, அங்கு வந்த மர்ம நபர் கத்தியைக் காட்டி மிரட்டி அவரிடம் இருந்த ரூ.5 ஆயிரத்தைப் பறித்துச் சென்றுள்ளார்.

இதுகுறித்த புகாரின்பேரில் பவானி போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், பணப் பறிப்பில் ஈடுபட்டது பவானிசாகர் அகதிகள் முகாமைச் சேர்ந்த ராகவன் (எ) கோழிகரண் (25) என்பது தெரியவந்தது.

அவரைக் கைது செய்து போலீஸார் விசாரித்தனர்.

இதில், அவர் பவானியில் கூட்டுக் கொள்ளை முயற்சி வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி என்பதும், இவர் மீது திருட்டு, கொள்ளை முயற்சி உள்ளிட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

இதையடுத்து, அவர் பவானி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு உடுமலையில் விழிப்புணர்வு பேரணி!



உடுமலை,பிப்.6

கோவை மாவட்டம்,பொள்ளாச்சியில் உள்ள என்.ஜி.எம் கல்லூரியில் சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற தலைக்கவச விழிப்புணர்வு பேரணியைக் கல்லூரி நிர்வாக மேலாளர் ரகுநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பொள்ளாச்சி போக்குவரத்து காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ரியாஷ் அகமது தலைமையில், ‘எண்ணம் போல் வாழ்க்கை’ அறக்கட்டளை நிறுவனர் எஸ்.ஏ.ஐ நெல்சன் முன்னிலையில் நடைபெற்ற இப்பேரணியில் நாட்டு நலப்பணித் திட்டம்,தேசிய மாணவர் படை , முதுகலை சமூகப் பணித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவமாணவிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் அனைவரும் தலைக்கவசம் அணிந்தபடி, சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பியவாறு பாலக்காடு சாலை, பேருந்து நிலையம், மகாலிங்கம் ஆர்ச் மற்றும் நியூ ஸ்கீம் சாலை வழியாக ஊர்வலமாகச் சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தனர். நிகழ்வின் நிறைவாக, போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது மற்றும் பாதுகாப்பான பயணம் மேற்கொள்வது குறித்து மாணவர்களுக்கு போக்குவரத்து காவல் துறை சார்பில் விரிவான ஆலோசனைகளும் அறிவுரைக ளும் வழங்கப்பட்டன.

# பெருந்துறையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 4 வங்கதேசத்தினர் கைது!

ஈரோடு,பிப்.6

ஈரோடு மாவட்டம், பெருந்துறையை அடுத்த பணிக்கம்பாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள நிறுவனங்களில் வங்கதேசத்தைச் சேர்ந்தவர் சட்டவிரோதமாக தங்கி பணியாற்றி வருவதாக பெருந்துறை போலீஸார், மாவட்ட கியூ பிரிவு போலீஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, பெருந்துறை பகுதியில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் போலீஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, விஜயமங்கலம் சங்கு நகர் பகுதியில் உள்ள நிறுவனத்தில் சோதனை மேற்கொண்டபோது, வங்கதேசத்தைச் சேர்ந்த இஸ்லாம் (30), ஷபான்மல்லி (27), முகமத் ஷாதிம் (30), மஜான் மொண்டல் (30) ஆகியோர் சட்டவிரோதமாக தங்கி, பணியாற்றி வருவது தெரியவந்தது. இதையடுத்து, 4 பேரையும் கைது செய்த போலீஸார், அவர்களை சேலம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள வெளிநாட்டினருக்கான சிறப்பு முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

# இடிந்து விழும் அபாயத்தில் பழமையான பேருந்து கூடம்; உயிர் பலிக்கு முன் நடவடிக்கை தேவை!



பாலக்கோடு, பிப்.6

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்துள்ள சித்திரப்பட்டி கிராமத்தில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இப்பகுதியில் இருந்து பள்ளி, கல்லூரி மற்றும் வேலைக்கு செல்வோர் சித்திரப்பட்டி நெடுஞ்சாலையில் உள்ள பழமையான பேருந்து நிழற் கூடத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இப்பகுதியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், வட்டார கல்வி அலுவலகம், உணவு பாதுகாப்பு கிடங்கு உள்ளிட்ட முக்கிய அலுவலகங்கள் செயல்பட்டு வரும் இப்பகுதியில் தினமும் ஆயிரகணக்கான பொதுமக்கள் வந்து செல்கின்றனர்.

பேருந்திற்காக காத்து கிடக்கும் பொது மக்கள் பேருந்து நிழற் கூடத்தை பயன்படுத்தி வரும் நிலையில்,

இந்த பேருந்து நிழற் கூடமானது மிகவும் பலவீனம் அடைந்து மேற்கூரை சிமெண்ட்காரைகள் சில்லு சில்லாக பெயர்ந்து கீழே விழுந்து வருகிறது.

எப்பொழுது வேண்டுமானலும் இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது,

பயணிகள் நின்று கொண்டிருக்கும் போது இடிந்து விழுந்தால் உயிர் பலி ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும் பேருந்து நிறுத்தம் எதிரில் சாலையோரம் உள்ள புளியமரத்தில் மோதி அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது.

வளைவான பகுதி என்பதாலும், சாலையோரம் புளியமரம் உள்ளதாலும் வளைவில் நிலைதடுமாறி புளிய மரத்தில் மோதி விபத்துக்கள் நடந்து வருகிறது. கடந்த 6 மாதத்தில் 10க்கும் மேற்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்சேதமும் ஏற்பட்டுள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகம் விபத்து ஏற்படும் முன்னர் பேருந்து நிழற் கூடத்தையும், புளியமரத்தையும் அகற்றி விட்டு,

புதிய பேருந்து நிழற் கூடத்தை அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.



# 100 நாள் வேலைவாய்ப்பு திட்ட பெயர் மாற்றம்;சேலத்தில் காங். ஆர்ப்பாட்டம்!

சேலம், பிப்.6

சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கபடி சார்பில், மகாத்மா காந்தியின் பெயரில் துவங்கப்பட்ட 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் உள்ள மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிய, மத்திய அரசை கண்டித்து, சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சேலம் மாநகராட்சி துணை மேயருமான சாரதா தேவி தலைமையில், மத்திய அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். வெள்ளிக்கிழமை சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சாரதா தேவி, 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் வேண்டுமென்று அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, காந்தியின் பெயரை மாற்றியது மிகவும் கண்டனத்துக்குரியது.

மத்திய பாஜக அரசு பொறுப்பேற்றுதில் இருந்து காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களின் பெயர்களை, வேண்டுமென்றே அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பெயர்களை மாற்றி, அவர்களுடைய விருப்பத்திற்கு தகுந்தார் போல, செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும், இனியும் இது தொடர்ந்தால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சேலம் மாநகர் மாவட்ட பிரிவின் சார்பில், மிகப்பெரிய போராட்டம் நடைபெறும் என சாரதா தேவி தெரிவித்தார். பின்னர் மத்திய அரசுக்கு எதிராக, பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு, கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர், துணை மேயர் சாரதா தேவி, முன்னாள் தலைவர் பாஸ்கர், தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளர் சுரேஷ், மாநகர் மாவட்ட செயலாளர் வசந்தம் சரவணன், தமிழ்நாடு ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ்தன் மாநில துணைத்தலைவர் லயன் டாக்டர் ரகுநாத், சுப்பிரமணி மற்றும் மண்டல தலைவர்கள், செயலாளர்கள், மகளிர் அணியினர், மாமன்ற உறுப்பினர் கிரிஜா குமரேசன், சோலையம்மா, தனசேகர், மகிலா காங்கிரஸ் சேலம் மாவட்ட தலைவி சுதா, கோபி குமரன், உள்ளிட்ட 300க்கும் மேற்பட்டோர் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சத்தியமங்கலம் அருகே சாலையோரம் உலவிய சிறுத்தை!

## வாகன ஓட்டிகள் அச்சம்!!



சத்தியமங்கலம்,பிப்.6

சத்தியமங்கலம் அருகே சாலையோரம் உலவிய சிறுத்தையால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்தனர்.

தமிழகம்–கர்நாடக மாநிலங்களை இணைக்கும் சத்தியமங்கலம் மைசூரு நெடுஞ்சாலையில் சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகள் உலவுவது வழக்கம்.

இந்நிலையில், சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் கோயில் சாலையோரத்தில் சிறுத்தை ஒன்று திங்கள்கிழமை இரவு உலவியது.

இதைக் கண்ட வாகன ஓட்டிகள், வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தினர்.

இதையடுத்து, சிறிது நேரம் சாலையிலேயே உலவிய சிறுத்தை பின் வனத்துக்குள் சென்றது. பின்னர், வாகனங்கள் புறப்பட்டுச் சென்றன.








# சேலம் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்ப்பு கூட்டம்!

சேலம், பிப்.6

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில், தாட்கோ தூய்மை பணியாளர்கள்நல வாரியத்தின்கீழ், பதிவு செய்யப்பட்டு இருக்கும் தூய்மை பணியாளர்களின் வாரிசுகளுக்கு, கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. என் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி, வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகையினை வழங்கி, அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். கல்வி உதவித் தொகையினை பெற்ற தூய்மை பணியாளர்கள் மாவட்ட ஆட்சியருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ICL Fincorp நிறுவனத்தின் புதிய NCD வெளியீடு 2026 பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்குகிறது!



சென்னை, பிப்.6

ICL Fincorp நிறுவனம் பிப்ரவரி 5 ஆம் தேதி பாதுகாப்பு கொண்ட மீட்கத்தக்க மாற்ற முடியாத கடன் பத்திரங்கள் (Secured Redeemable Non Convertible DebentureNCDS) என்ற தனது புதிய பொது வெளியீ ட்டை ( New Public issue) அறிமுகபடுத்து வதில் பெருமை கொள்கிறது அதிக பட்சமாக 12.25% வரை பயனளிக்கும் வருமானத்துடன் மாற்றக்கூடிய முதலீட்டு கால அ வ கசங்களை (Flexible tenures) நா டும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பான மற்றும் க வரக்கூடிய முதலீட்டு வாய்ப்பாகும் இந்த NCD வெளியிட்டில் 2026 பிப்ரவரி 18 தேதி வரை முதலீடு செய்யலாம் மற்றும் இதற்குCRISILBBB/Stable என்ற மதிப்பீடு வழங்கபட்டுள்ளது ஒவ்வொரு NCD யி ன் முகப்பு மதிப்பு ரூபாய் 1000 ஆகும் ஆகும் மொத்தம் 10 தேர்வுகள் (10 ISINகள் ) வழங்கபடுகின்றன 13, 24 ,36 ,60 மற்றும் 72 மாத கால அவகாசங்களுக்கு மாதாந்திரம் வருடாந்திர மற்றும் கூட்டு (Cumulative) வட்டிக்கான வாய்ப்புகள் உள்ளன வட்டி விகிதம் 10,000% முதல் 12.25% வரை இருக்கும் குறைந்தபட்ச விண்ணபத் தொகை 10,000 ஆக இருப்பதால் பல்வேறு வகையான முதலீட்டாளர்களுக்கு எளிதாக அணுக்கக்கூடியதாகும் 34 ஆண்டு சிறப்பான பாரம்பரியத்துடன் CMD ADV ,K.G அனில் குமார் அவர்களின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் ICL Fincorp நம்பகமான நிதி துணைவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது ICL Fincorp நிறுவனம் தங்க கடன், ஹையர் பர்சேஸ் கடன் வணிக கடன் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை உள்ளடக்கி முழுமையாக நிதி சேவைகளை வழங்குகிறது. CMD ADV ,K.G அனில் குமார் மற்றும் முழு நேர இயக்குனர் திருமதி உமாதேவி அணில் குமார் ஆகியோரின் இணைந்த தலைமையின் ICL Fincorp இந்திய ரிசர்வ் வங்கியின் முழுமையாக உ ட்பட்டு செயல்பட்டு வருவதுடன் வாடிக்கையாளரின் நிலையான நம்பிக்கையை பெற்றுள்ளது.

# போயிங் BUILD திட்டத்தின் 5வது பதிப்பிற்கான விண்ணப்பங்கள் தொடக்கம்; மாணவர் புதுமையாளர்கள் , ஸ்டார்ட்அப் களுக்கு அழைப்பு!



சென்னை, பிப்.6

போயிங் [NYSE: BA], 2025–26 காலத்திற்கான Boeing University Innovation Leadership Development (BUILD) திட்டத்தின் ஐந்தாவது பதிப்பிற்கான விண்ணப்பங்களை தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த திட்டம், இந்தியா முழுவதும் உள்ள மாணவர் புதுமையாளர்கள் மற்றும் தொடக்க நிலை ஸ்டார்ட்அப் களுக்கு தங்கள் யோசனைகளை இன்குபேட்டர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் போயிங்கின்தொழில்துறைநிபுணர்களுடன்இணைத்து, சந்தைக்கு தயாரான தீர்வுகளாக மாற்றும் ஒரு முக்கிய மேடையாக வளர்ந்துள்ளது. போயிங்கின் மாநில ஆதரவு மற்றும் உலகளாவிய ஈடுபாடு துறையின் துணைத் தலைவர் பில் மிகெஷர் கூறுகையில், “மாணவர்களும் தொழில்முனைவோர்கள் கொண்ட யோசனைகளை நடைமுறைதீர்வுகளாகமாற்றBUILDஒருநிரூபிக்கப்பட்ட தளமாக உள்ளது. இந்த திட்டம் எடுக்க உள்ள அடுத்த உயர்ந்த பாய்ச்சலுக்கு ஆதரவளிப்பதாக பெருமைப்படுகிறோம்,” என்றார். போயிங் இந்தியா மற்றும் தெற்காசியாவின் தலைவர் சலில் குப்தா கூறுகையில், “இந்தியாவின் ஸ்டார்ட்அப் சமூகத்தில் உள்ள தைரியமான சிந்தனையும் தொழில்நுட்ப திறனையும் BUILD ஊக்குவித்து வருகிறது,” என்றார். தேர்ந்தெடுக்கப்படும் அணிகள் பிராந்திய பூட் கேம்பிலும், 2026 ஜூலை மாதத்தில் நடைபெறும் Boeing Immersion Day மற்றும் BUILD இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு பெறுகின்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு தலா ரூ.10 லட்சம் மானியம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் ஏப்ரல் 4, 2026க்குள் விண்ணப்பிக்கலாம்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

### 5 நாள் நடந்த சிறப்பு முகாம்களில்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 42 ஆயிரத்து 662 பேர் விண்ணப்பம்!

## கிருஷ்ணகிரி கலெக்டர் தகவல்!!

கிருஷ்ணகிரி,பிப்.6

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி 01.01.2026 தேதியை தகுதி நாளாகக் கொண்டு தகுதியுள்ள அனைவரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதை உறுதி செய்யவும், தகுதியற்ற பெயர்களை நீக்கவும் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கடந்த 19.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து பட்டியலில் விடுபட்டவர்கள் மற்றும் 2026 ஜனவரி 1–ம் தேதியில் 18 வயது நிரம்பிய இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6–ம், வெளிநாடு வாழ் இந்தியர்கள் படிவம் 6ஏ–விலும் விண்ணப்பித்தனர்.

அதே போல் இறந்தவர்கள் மற்றும் இரட்டைப் பதிவு உள்ளவர்களின் பெயர்களை நீக்கப் படிவம் 7–ம், பெயர் மற்றும் முகவரி திருத்தங்களுக்குப் படிவம் 8–ம் விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

ஆட்சேபனை மற்றும் உரிமைகோரல் காலங்களில் பெறப்பட்ட படிவங்களுக்கான அட்டவணை படிவங்கள் எண்.9,10,11,11ஏ மற்றும் 11பி ஆகியவை கணிணியில் பதிவேற்றம் செய்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஏதேனும் ஆட்சேபனைகள் மற்றும் மறுப்புரைகள் இருந்தால் அதனைத் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 2,092 வாக்குச்சாவடி மையங்களில் கடந்த டிசம்பர் மாதம் 27, 28 மற்றும் ஜனவரி 3,4,25 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதைத்தவிர இணையதளம் வாயிலாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கடந்த டிசம்பர் 19 முதல் ஜனவரி 30 வரை சிறப்பு முகாம்கள் மற்றும் இணைய வழி மூலமாக 62,858 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

6 சட்டமன்ற தொகுதிகளிலும் பெயர் சேர்க்க 42 ஆயிரத்து 662 பேரும், வெளிநாடு வாழ் இந்தியர் படிவம் 5–ம், இறந்தவர்கள் மற்றும் பெயர்களை நீக்க 4773 விண்ண ப்பங்களும், பெயர் முகவரி திருத்தங்களுக்கு 15 ஆயிரத்து 418 விண்ணப்பங்களும் என மொத்தம் 62 ஆயிரத்து 858 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

சிறப்பு தீவிரதிருத்த இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 17–ந் தேதி அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் வெளியிடப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு , துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு57, வால்டாக்ஸ் ரோடு, வ.உ.சி. சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாயக் கூட பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ல.நவீன், வெ.பரிமளம், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுதா தீனதயாளன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரூர் அருகே கைவரிசை:

# அரசு வேலை ஆசை காட்டி ரூ.2.99 லட்சம் மோசடி!

## ரெயில்வே ஊழியருக்கு வலைவீச்சு!!

அரூர்,பிப்.6–

தர்மபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள கூக்கடப்பட்டியை சேர்ந்தவர் அரிகிருஷ்ணன்(37). இவரிடம் வாச்சாத்தியை சேர்ந்த தென்னக ரயில்வே கேட் கேட்பாராக பணியாற்றி வரும் செந்தில்குமார்(38) என்பவர் நைசாக பேசி தென்னக ரயில்வேயில் அரசு வேலை வாங்கி தருவதாக கூறியுள்ளார்

இதை நம்பிய அரிகிருஷ்ணன் கடந்த செப்படம்பர் 2019ல் 2.99 லட்சம் ரூபாய் அரிகிருஷ்ணன் செந்தில் குமாரிடம் கொடுத்துள்ளார் அதன் பின் செந்தில் குமார் வேலை வாங்கி தராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார் . எனவே அரிகிருஷ்ணன் தான் கொடுத்த பணத்தை கொடு என கேட்டுள்ளார். பணத்தை திருப்பி தராமல் செந்தில்குமார் ஏமாற்றி வந்துள்ளார் இது குறித்து அரிகிருஷ்ணன் கோபிநாதம்பட்டி போலீசில் புகார் அளித்தார் புகாரின் பேரில் கோபிநாதம்பட்டி போலீசார் ரயில்வே ஊழியரான செந்தில்குமார் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



தமிழ்நாடு அரசு ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை சிற்றங்காடி திறப்பு நீலகிரி மாவட்டம் உதகை வட்டம் மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலையின் சிறு கூட்டுறவு பல்பொருள் சிறப்பு அங்காடி நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தே.சித்ரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் 10,000 முகாம்கள் நலத்திட்டப் பயன்கள் மற்றும் 1.80 லட்சம் பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கியதைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், , தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டப் பயன்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.கவிதா, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மது விற்றவர் கைது!

ஈரோடு,பிப்.4

பெருந்துறை அருகே சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட நபரை போலீஸார் கைது செய்தனர். பெருந்துறையை அடுத்த துடுப்பதி பகுதியில் சட்டவிரோதமாக மது விற்பனை நடைபெறுவதாக போலீஸாருக்கு செவ்வாய்க்கிழமை ரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, அப்பகுதியில் பெருந்துறை போலீஸார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, துடுப்பதி அரசு மதுபானக் கடை அருகே மது விற்பனையில் ஈடுபட்டிருந்த நபரைப் பிடித்தனர்.

விசாரணையில், அவர் அதே பகுதியைச் சேர்ந்த சரண்ராஜ் (37) என்பதும், மதுபானங்களை பதுக்கிவைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அவரை போலீஸார் கைது செய்தனர்.

# டேக்வாண்டோ போட்டியில் கோவை மாணவர்கள் சாதனை!



மேட்டுப்பாளையம்,பிப்.6

அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் கல்லூரிகளுக்கு இடையேயான மண்டலஅளவிலானடேக்வாண்டோ போட்டிகள் திருச்சி தொட்டியம் தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் கடந்த ஜன.10 ஆம் தேதி நடந்தது.

இதில் கலந்து கொண்ட மேட்டுப்பாளையத்தை சேர்ந்தவரும், கோவை ராமகிருஷ்ணா இன்ஜினியரிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவன் சஞ்சய் முதலிடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் அவர் வரும் மார்ச் மாதம் பஞ்சாபில் நடைபெற உள்ள ஆல் இந்தியா யுனிவர்சிட்டி போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதேபோட்டியில் மேட்டுப்பாளையத்தை சேர்ந்த ஷாராபத் ரோஷன் என்ற மாணவரும் கலந்து கொண்டு வெண்கல பதக்கம் வென்றுள்ளார். இவர்தற்போது கோவை நேரு பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.

இந்த மாணவர்கள் இருவரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடத்தப்பட்ட மாநில அளவிலான டேக்வாண்டோபோட்டியில்சாதித்து விளையாட்டு ஒதுக்கீட்டில் தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு பெற்று அதன் மூலம் படித்து வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

டேக்வாண்டா போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களை பெற்றோர்கள், கல்லூரி ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள்,சக மாணவர்கள் பாராட்டி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# ஒசூர் வனக்கோட்டத்தில் மாநில அளவில் வேட்டை பறவைகள் கணக்கெடுப்பு!

ஓசூர்,பிப்.6

ஓசூர் வனக்கோட்டத்தில் மாநில அளவிலான வேட்டை பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் 2 நாட்கள் நடந்தன.

2025–2026–ம் ஆண்டிற்கான மாநில அளவிலான வேட்டை பறவைகள் கணக்கெடுப்பு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்தில் 2 நாட்கள் நடந்தன.

தமிழ்நாடு முழுவதும் வேட்டை பறவைகளின் இன வகைகள் அவற்றின் எண்ணிக்கையை மதிப்பிடும் நோக்கில் இந்த கணக்கெடுப்பு நடந்தது. இதற்காக மாவட்டத்தில் 16 இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. அதன்படி முதல் நாள் இரவு நேரமும், அடுத்த நாள் பகலும் ஆய்வுகள் நடத்தப்பட்டன.


இந்த கணக்கெடுப்பில் 40–க்கும் மேற்பட்ட வனத்துறை அதிகாரிகள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தொலைநோக்கிகள் மற்றும் கேமராக்கள் மூலம் பூமன் ஆந்தை, பொரிப்புள்ளி ஆந்தை, நீண்டவால் காட்டுபக்கி, வல்லூறு, சிறிய மீன் கழுகு, கொண்டை பாம்புண்ணி கழுகு உள்ளிட்ட வேட்டை பறவைகள் கண்டறியப்பட்டன.

இந்த கணக்கெடுப்பு ஓசூர் வனக்கோட்ட வன உயிரின காப்பாளர் ராஜாங்கம், உதவி வன பாதுகாவலர் பசவ்சிங் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் நடத்தினார்கள்.

மாநில அளவில் வேட்டை பறவைகள் கணக்கெடுப்பில் பங்கேற்ற அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் வனத்துறை சார்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு துறை நிபுணர்களுக்கான இந்தியாவின் முதல் Symposium & Quiz – சென்னை வரவேற்கிறது!




சென்னை, பிப்.6

சென்னை வர்த்தக மையத்தில் 13 மற்றும் 14 பிப்ரவரி 2026 அன்று, மின்தூக்கி மற்றும் நகரும் படிக்கட்டு துறை நிபுணர்களுக்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் Symposium & Quiz 2026 நிகழ்வை ISEE நடத்துகிறது. உருவாகும் புதிய தொழில்நுட்பங்கள், பாதுகாப்பு புதுமைகள், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து உயர்தர தெரிவுப் பகிர்வை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த இரண்டு நாள் நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வை தமிழ்நாடு அரசு தலைமை மின்சார ஆய்வாளர் திரு. வி. ராமகிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைக்கிறார். தொடக்க விழாவில் L&T Construction நிறுவனத்தின் MEP வடிவமைப்பு தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன், EECMAI தலைவர் மற்றும் Wittur Group ஆசியா பசிபிக் தலைவர் திரு. சுராஜ் தோடி மரத், மற்றும் REVROY Pvt Ltd நிறுவனர் இயக்குநர் திரு. ரவிசங்கர் தண்டவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கிறார்கள். KONE, OTIS, Mitsubishi Electric, Fujitec, Johnson Lifts உள்ளிட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 2,000க்கும் மேற்பட்ட நிபுணர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முயற்சி குறித்து TAK Consulting நிறுவனத்தின் பிரதான ஆலோசகரும் ஏற்பாட்டாளருமான திரு. T.A.K. மேத்யூஸ் அவர்கள், துறையில் உள்ள நிபுணர்கள் அறிவைப் பகிர்ந்து கொண்டு, புதுமைகளை பரிமாறி, சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் ஒழுங்குமுறை இயக்கங்களைப் பற்றி புதுப்பித்து கொள்ளும் ஒருங்கிணைந்த கற்றல் மேடையாக இந்த Symposium அமையும் என்று தெரிவித்தார். Symposium உடன் இணைந்து ISEE Elevator Industry Quiz 2026 அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறுகின்றன. பதிவு செய்ய: 95660 77719 / 79775 56164.

### நாமக்கல் மாநகராட்சியில்

# நாய் தொல்லை பற்றி புகார் அளிக்க 'டோல் ப்ரீ' எண் வெளியீடு!

நாமக்கல், பிப். 6

நாமக்கல் மாநகராட்சி பகு தியில் தெருநாய் தொல்லை இருந்தால் புகார் தெரிவிக்க, 'டோல் ப்ரீ' நெம்பர் வெளியிடப் பட்டுள்ளது.

கல்வி நிறுவனங்கள், அரசு, தனியார் அலுவலகங்கள், பஸ் டிப்போக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் ரயில் நிலை யங்களில், தெரு நாய்களை கட் டுப்படுத்துவது தொடர்பாக, உச்ச நீதிமன்றம் சமீபத்தில் நெறிமுறை களை அறிவித்துள்ளது. அவற்றை நாமக்கல் மாநகராட்சி பகுதியில் அமல்படுத்துவது தொடர்பாக, கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் நிர்வாகிகள், அரசு அலுவலர்களுக்கான ஒருங் கிணைப்புக்குழு கூட்டம், மாநக ராட்சி அலுவலகத்தில் நடந்தது.

மாநகர நல அலுவலர் கஸ்துாரிபாய் கூறியதாவது:

மாநகராட்சி சார்பில் நாய்கள் பாதுகாப்பு அமைப்பகம் (ஏபிசி சென்டர்) அமைக்க ஏற்பாடு செய் யப்படும் என தெரிவிக்கப்பட் டது. மேலும், பள்ளிகள், மருத்து வமனைகள், வணிக வளாகங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள பகுதியில், தெரு நாய்கள் நுழையாமல் அல்லது வசிக்காமல் பார்த்துக்கொள்ள சுற்றுச்சுவர், வேலிகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்து, மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மைதா ஒவ்வொரு பள்ளி, கல்லூா ரிகளிலும், நாய்கள் கடித்தால் முதலுதவி மற்றும் உடனடியாக புகார் அளிக்கும் நெறிமுறைகள் னங்கள் மற்றும் விளையாட்டு வளாகங்களில் தெருநாய்கள் நுழைவதையோ அல்லது வசிப்ப

தையோ தடுக்க, 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியாளர்களை நியமிக்க வேண்டும். விலங்கு களை ஈர்க்கும் உணவு ஆதாரங் களை அகற்ற, முறையான கழிவு மேலாண்மை அமைப்புகள் செயல்படுத்த வேண்டும்.மாநகராட்சி சார்பாக, தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப் படுத்துவதற்கு கருத்தடை மற்றும் தடுப்பூசி போடப்பட்டு வருகி றது. தெரு நாய்கள் மூலம், ஏதா வது தொந்தரவு இருந்தால், மாநக ராட்சியின் அலுவலக உதவி எண், 18005997990 என்ற எண்ணிற்கு

தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் பேசினார்.கண்ணன், சுகாதார அலுவலர் திருமூர்த்தி, ரெட்கிராஸ் செயலாளர் ராஜேஷ் துப்புரவு ஆய்வாளர்கள் செல்வகுமார், பாஸ்கரன், ஜான் ராஜா, சுப்ரமணியன் உள் பட பலர் பங்கேற்றனர்.

# வேன் மோதி மெக்கானிக் சாவு!

பவானி.பிப்.6

ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை அருகே உள்ளபட்லூர்கெம்மியம் பட்டியை சேர்ந்தவர் சரவணன் (30).

இவர் தனியார் கம்பெனியில் மெக்கானிக்காக வேலை செய்து வந்தார். அதே பகுதியை சேர்ந்த சண்முகம் (31). இருவரும் நண்பர்கள் இந்நிலையில் சரவணனும், சண்முகமும், மோட்டார் சைக்கிளில் சொந்த வேலையாக பூனாச்சிசென்றனர். பின்னர் மீண்டும் கெம்மியம்பட்டிக்குவந்து கொண்டு இருந்தனர். மோட்டார் சைக்கிள் சரவணன் ஓட்டி சென்றுள்ளார். அம்மாபேட்டை அந்தியூர் மெயின்ரோடுசமய தானூர் அருகே சென்றபோது எதிரே வந்த வேன் மோட்டார் சைக்கிளில் எதிர்பாராத விதமாக மோதிக்கொண்டன. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து இருவரையும் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தனர். இதில் சம்பவ இடத்திலேயே சரவணன் உயிரிழந்தார்.

வெள்ளித் திருப்பூர் போலீசார் விசாரித்துவருகின்றனர்.

# காவல்துறை அறிவிப்பு!

கூடலூர், பிப்.6

சேரம்பாடி காவல் நிலைய குற்ற எண்: 143/1998 u/s 147, 148, 451, 436, 506(ii) IPC வழக்கில் சம்பந்தப்பட்ட அசோகன்(56) s/o சீனிவாசன், கொளப்பள்ளி போஸ்ட், கொளப்பள்ளி, நீலகிரி, என்பவர் மீது கூடுதல் அமர்வு நீதிமன்றம் கூடலூர் கோர்ட்டில் SC.No: 20/2010 என்ற வழக்கு கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்கூறிய எதிரி கடந்த 8 வருடங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமுறைவாக இருந்து வருகிறார் மேலும் கூடலூர் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் இவரை அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கப்பட உள்ளது. எனவே மேற்கண்ட எதிரி அசோகன் என்பவரை பற்றி ஏதேனும் தகவல் தெரிந்தால் சேரம்பாடி காவல் நிலையத்திற்கு கீழ்க்கண்ட எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கவும். சேரம்பாடி காவல்நிலைய தொலைபேசி எண்: 9498101268



அறிஞர் அண்ணாவின் 57வது நினைவு தினத்தையொட்டி திருமூர்த்தி மலை அமணலிங்கேஸ்வரர் கோவிலில் சமபந்தி விருந்து நடந்தது. இதில் அறங்காவலர் குழு தலைவர் மொடக்குப்பட்டிரவி, திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு, குழு உறுப்பினர் சாமி அறங்காவலர்கள் ராஜ்மோகன் ,தேவராஜ். செயல் அலுவலர் அமரநாதன். உட்பட பலர் கலந்து கொண்டனர். உடுமலை மாரியம்மன் கோவிலில் நடந்த பொது விருந்தில் பரம்பரை அறங்காவலர் யு எஸ் எஸ் ஸ்ரீதர் செயலாளர் தீபா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம் தாமோதரஅள்ளி ஊராட்சி சாதிநாய்க்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சி.சாந்தகுமார், மறைவுக்கு தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் ஆர் சக்கரபாணி உடன் மாவட்ட கழக செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மாவட்ட அவைத்த லைவர் தட்ரஅள்ளி நாகராஜ், டேம் வெங்கடேசன்,காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் மகேந்திரன், தொண்டரணி அமைப்பாளர் ஆவத்துவாடி நாகபூசனம்,ஒன்றிய துணை செய லாளர் தட்ரஅள்ளி ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி சங்கர், கவுன்சிலர் வடிவேல், தேவிரஅள்ளி பாரி மற்றும் கழக நிர்வாகிகளுடன் செனறு மலர் மாலை அணி வித்து மரியாதை செலுத்தி பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை கந்தசாமிபுரம் பகுதியில் அமைந்துள்ள பியூலா மெட்ரிகுலேஷன் பள்ளியில் மாபெரும் உணவு திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பள்ளியின் முதல்வர் கிஷோர் தலைமையில் நடைபெற்றது



தமிழ்நாடு நாட்டுப்புற மேடை நடன கலைஞர்கள் மற்றும் திருநங்கை மாற்றுத்திறனாளி அனைத்து கலைஞர்கள் சங்கம் சேலம் மாவட்ட பிரிவின் சார்பில், சேலம் கோட்டை மைதானத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், மாநில செயலாளர்பார்த்திபன், மாநிலதலைவர்வினோத்குமார், மாநிலபொருளாளர்செல்வகுமார், மாநிலத் துணைத் தலைவர் ராம்குமார், விஜயகாந்த் குமரேஷ், அஜித் ராஜ்குமார், பிரேம், ரம்யா, கோவை அலேக்ரா ஜெயந்தி, நிவேதா, கார்த்தி பிரியா, வீரப்பன் மணிமாறன், சேகர், கலைஞர் மோகன்ராஜ், விஜயகாந்த் பெருமாள். உள்ளிட்ட நூற்றிக்கும் மேற்பட்டோர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## எந்த நாட்டிலிருந்தும் வாங்க உரிமையுண்டு:

# கச்சா எண்ணெய் இறக்குமதியை நிறுத்த போவதாக இந்தியா எங்களிடம் சொல்லவில்லை!

## அமெரிக்காவுக்கு ரஷ்யா பதிலடி!!

புது டெல்லி, பிப்.6–

இந்தியா உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்கிறது. எந்த நாட்டிலிருந்தும் எண்ணெய் இறக்குமதி செய்ய இந்தியாவுக்கு உரிமை யுண்டு. அதே சமயம், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண் ணெய் வாங்குவதை நிறுத்தப் போவதாக இந்தியா எங்களி டம் அதிகாரப்பூர்வமாக எதையும் தெரிவிக்கவில்லை என்று ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். இது ரஷ்யா உடனான எண்ணெய் வர்த்த கத்தை இந்தியா நிறுத்தி விட்டதாக அறிவிப்பு வெளியிட்ட அமெரிக்க அதிபர் டிரம்புக்கு கொடுத்த பதிலடியாக பார்க் கப்படுகிறது.

ரஷ்யாவில் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்கு மதி செய்வதை அமெரிக்கா தொடக்கம் முதலே எதிர்த்து வந்தது. இதையடுத்து இந்திய இறக்குமதி பொருட்கள் மீதான வரியை 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைப்பதாக அதிபர் டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டார். மேலும் ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய் ததற்காக விதிக்கப்பட்ட 25 சதவீதம் அபராத வரியும் முழு மையாக ரத்து செய்யப்பட்டது. இதன் மூலம் இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த 50 சதவீத இறக்குமதி வரி 18 சதவீத மாக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியா உலகின் எந்த நாடு களில் இருந்தும் கச்சா எண்ணெய் வாங்க உரிமை உள்ளது. ரஷ்யா மட்டுமே இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வழங் கும் ஒரே சப்ளையர் கிடையாது. மற்ற நாடுகளில் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் கொள்முதல் செய்கிறது. இதில் புதிய விஷயம் எதுவும் கிடையாது. அதே சமயம், ரஷ்யா விடம்இருந்துகச்சாஎண்ணெய்இறக்குமதியைநிறுத்துவது தொடர்பாக இந்தியாவிடம் இருந்து எங்களுக்கு எந்த வித மான அறிவிப்பும் இதுவரை வரவில்லை.

அதே போல, ரஷ்ய எண்ணெயை வாங்க மாட்டோம் என்று ஒரு அதிகாரப்பூர்வ ஒப்பந்தத்திலும் பிரதமர் மோடி கூறவில்லை என்று தெரிவித்துள்ளார் என்று தெரிவித்தது.


# பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் கதவு எண் 4/47, மெயின் ரோடு,முடவன்குளம் 627501 என்ற முகவரியில் வசிக்கும் பாக்கியமுத்து முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்.

எனது கட்சிக்காரர் மூலக்கரைப்பட்டி சார்பதிவகத்தில் 2525/2025 பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் பழைய சர்வே எண் 594 பு.சர்வே எண் 859/31 க்கான சுமார் 2.05 சென்டு சொத்தையும், அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Ltd ல் கடன் கோரும் போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான மூல ஆவணம் பட்டா எண் 468ஐ கட்சிக்காரர் Xerox எடுப்பதற்காக கடந்த 19/01/2025 அன்று பேருந்தில் சென்ற போது அவரிடம் இருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூல ஆவணம் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் மூலஆவணத்தை எடுத்து தன் வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யாரேனுமே உரிமையோ, ஆட்சேபனையோ பின் தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சியேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**M. MARIA SINGAM .**

M. A. LLB , ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24,LAW CHAMBER, NAGERCOIL1





சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு138, எம்.ஜி.ஆர் நகர், கோவிந்தசாமி தெருவில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல மையத்தினைத் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, மத்திய வட்டார துணை ஆணையர் . எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் கே.கண்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி நகராட்சி, தேவராஜ் மஹாலில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட 4,126 மா விவசாயிகளுக்கு மாநில பேரிடர் நிவா ரண நிதியிலிருந்து, ரூ.8 கோடியே 97 இலட்சத்து 91 ஆயிரத்து 132 மதிப்பிலான நிவாரண தொகை வழங்கும் பணிகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர்.கே. கோபிநாத், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர். காளிமுத்து, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்.குணவதி டேம் வெங்கடேசன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி சங்கர் பெற்றுக்கொண்டார்.



தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் குன்னூர் அறிஞர் அண்ணா அரசு மேல்நிலை ப்பள்ளி, மஞ்சக்கம்பை அரசு உயர்நிலைப்பள்ளி, அரவேணு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் அறிவியல் விழிப்புணர்ச்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. அறிவியல் இயக்கத்தின் மாநில கருத்தாளர் ஓய்வு பெற்ற ஆசிரியர் கே. ஜே. ராஜு கலந்து கொண்டனர்.

# கொடிசியா பில்ட் இன்டெக் 2026 கண்காட்சி!

## இன்று முதல் 9ம் தேதி வரை 4 நாட்கள் நடக்கிறது!!



கோவை,பிப்.6

கொடிசியா பில்ட் இன்டெக் 2026 கண் காட்சி வரும் பிப்ரவரி 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெறுகி றது கோவை கொடிசியா வணிக வளாகத் தில் கொடிசியா பில்ட் இன்டெக் 15வது பதிப்பு 2026 கண்காட்சி வரும் பிப்ரவரி 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெறுகிறது.

இந்தகண்காட்சியில்சிறப்புவிருந்தினராக Jindal Realty CRO அபே குமார் மிஸ்ரா மற்றும் கௌரவ விருந்தினராக L&T Head Precast Di vision அமித் தீபிப் பார்டே கலந்து கொள் கின்றனர். இந்த கட்டுமான கண்காட்சியில் கட்டிடம் மற்றும் கட்டுமான பொருட்கள் முழுவதும்இடம்பெற்றிருக்கும்.ப்ரிகாஸ்ட் மற்றும் தொழில்சார் கட்டுமான முறைகள் குறித்து கட்டுமான தொழில் நுட்பங்களில் எதிர்கால வளர்ச்சி குறித்து சிறப்பு கருத்து பகிர்வு மற்றும் கலந்துரையாடலும் நடை பெற உள்ளது.

இந்த கண்காட்சியில் இந்தியா முழுவ தும் இருந்து சுமார் 40,000 மேற்பட்டோர் கலந்து கொள்கின்றனர்.

அதேபோல டெல்லி,குஜராத்,ஹரி யானா கர்நாடகா,கேரளா,மகாராஷ்டிரா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மாநிலங்க ளில் இருந்து பார்வையாளர்கள் மற்றும் முத லீட்டாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

பிப்ரவரி 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெறும் கண்காட்சி யில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார் கள் என இவ்வாறு தெரிவித்தனர்.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
மற்றும் வருவாய் கோட்டாட்சியர்
அலுவலகம், பழனி.
ந. எண்:009998

வெ. காளிமுத்து ,
த/பெ. வெள்ளைச்சாமி
பூசாரி கவுண்டன் வலசு
வாகரை பழனி.
...மனுதாரர்,

எதிராக,

வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி.
எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்காணும் என் வழக்கில் மனுதாரரின் தாத்தா பழனி கவுண்டர் என்பவர் 1996, பூசாரி கவுண்டன் வலசு வாகரை, பழனி என்ற இடத்தில் இருந்ததை உட்கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டிய மனு தக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கும் ஆட்சேபனை இருந்தால் 30 தினங்களுக்குள் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டியது, தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒரு தலைப்பட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.

காளிமுத்து,
மனுதாரர்.

## போச்சம்பள்ளி அருகே

# புளியம்பட்டி அரசு பள்ளியில் ஆசிரியர் சர்ச்சைக்குரிய பேச்சு!

## ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் பாஜக மனு!!



கிருஷ்ணகிரி,பிப்.6

கிருஷ்ணகிரி மாவட் டம் போச்சம்பள்ளி அருகே உள்ள புளியம்பட்டி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி வரும் கணத ஆசிரியர் குமார், நேற்று 03.02.2026 பள்ளியில் நடைபெற்ற இலவச சைக்கில் வழங் கும் விழாவில், சர்ச்சைக் குரிய வகையில் பேசி னார். திமுகவை சேர்ந்த பர்கூர் சட்டமன்ற உறுப்பி னர் மதிழகன் பங்கேற்ற இலவச சைக்கில் வழங் கும் விழாவில், அரசுக்கும் உங்களுக்கும் பிடிக்காத நிறம் காவி. அந்த நிறத் தில் உள்ள மூன்று பள்ளி கட்டிடங்களின் வண் ணத்தை மாற்றிட வேண் டும். புதிய வண்ணத்தில் மாற்ற நிதி வழங்கிட வேண்டும் என பேசினார். இந்நிகழ்வில்

பிஜேபி கட்சியை நேர டியாக விமர்சித்த காரணத் தால், கிருஷ்ணகிரிகிழக்கு மாவட்ட தலைவர் கவிய ரசுதலைமையில் 100க்கும் மேற்பட்டோர் சம்பந்தப் பட்ட ஆசிரியர் மீது நடவ டிக்கை எடுக்க போச்சம் பள்ளி காவல் நிலையத்தில் இன்று 04.02.2026 புகார் அளிக் கப்பட்டது. நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நாளை 05.02.2026 அன்று போச்சம்பள்ளி 4 வழி சாலையில் என்டிஏ கூட் டணி சார்பில் மாபெறும் ஆர்பாட்டம் நடைபெ றும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிகழ்வில் அதிமுக ஒன்றிய செயலாளர் திரு மால், பாமக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலா ளர் பழனிவேல் உள் ளிட்ட என்டிஏ கூட்ட ணியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றி ருந்தனர்.

